# 1 தொல்காப்பியத் துளிகள்




## முனைவர் ச. ...ரியா

உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, வேல... கழகம், சென்னை.


### முன்னுரை :

தமிழில் முழுமையாகக் கிடைக்கக் கூடிய இலக்கண நூல் தொல்காப்பியம் என்னும் பேரிலக்கணமாகும். இந்நூல் தமிழ் மொழியின் பெருமையையும் பழந்தமிழரின் அறிவுத் திறனையும் எடுத்துக் காட்டும் மிகச் சிறந்த ஆவணமாகத் திகழ்கிறது. இந்நூல் பண்டைத் தமிழின் இயல்புகளை இயம்புவதோடு இன்றைத் தமிழையும் இனிதே வழி நடத்திச் செல்கிறது; கால வேகத்தால் அடித்துச் செல்லப்பட்டு அழிவு என்னும் பள்ளத்தில் செந்தமிழை விழாது காக்கும் கடிவாளமாகவும், தமிழ் என்னும் வயலில் பிழைகள் என்னும் களைகள் தோன்றாது காக்கும் மாமருந்தாகவும் தொல்காப்பியம் திகழ்கிறது. தொல்காப்பியம் இலக்கண விதிகளை விளக்கிச் செல்லும் ஒரு விளக்கமுறை இலக்கணம் (Descriptive Grammer) என்றாலும் அறிவியல் அடிப்படையில் அமையும் மொழியியல் இலக்கணப் (Linguistic Grammar) பார்வையும் தொல்காப்பியத்தில் உண்டு.

### நூலாசிரியர்:


தொல்காப்பியம் என்னும் இவ்வரிய இலக்கண நூலை ஆக்கித் தந்தவர் தொல்காப்பியனார். இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் பாடியவர், தொல்காப்பியரின் ஒருசாலை மாணாக்கராகிய பனம்பரனார் என்பவராவார்.

### சிறப்புப் பாயிரம் :

**"வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுகத்து (பனம்பாரனார்)** என்னும் இச்சிறப்புப் பாயிரத்தின் மூலமாக, வட வேங்கடத்திற்கும் தென் குமரிக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களின் எழுத்தமைவு, சொல்லமைவு, பொருளமைவு ஆகியன குறித்து ஆராய்ந்து, செந்தமிழ் பேசப்படும் நிலத்தின் மொழியையும் ஆராய்ந்து, இந்நூல் எழுதப்பட்டுள்ளமையால் பழந்தமிழகத்தின் எல்லைகளாக வடவேங்கடமும் தென்குமரியும் இருந்துள்ளமை அறிய முடிகின்றது.

### தொல்காப்பியம் அரங்கேற்றம் :

தொல்காப்பியர் தமக்கு முன்னிருந்த நூல்களையெல்லாம் கற்று உணர்ந்து முறைப்படி இந்நூலை வகுத்துள்ளார் என்பதும் தொல்காப்பியம் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில், அதங்கோட்டு ஆசான் முன்னிலையில் அரங்கேறியமையும் இச்சிறப்புப் பாயிரத்தின் மூலம் அறிய முடிகின்றது.



### ஆய்வு நெறிமுறை :

தொல்காப்பியர் தமக்கு முன் தோன்றிய நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து வழக்கு, செய்யுள் ஆகிய இரண்டையும் தழுவி நூல் செய்தார் என்பதை, இந்நூலில் வரும் 'என்ப', 'என்மனார் புலவர்', 'யாப்பு... புலவர்', 'தொன்மொழிப் புலவர்', 'குறியறிந்தோர்' என வரும் சொற்றொடர்களால் அறியலாம். இன்றைய

ஆராய்வாளர்கள் பின்பற்ற வேண்டிய ஆராய்ச்சி நெறிகளுள் முக்கியமானதொன்று நாம் ஆய்வு மேற்கொள்ள வேண்டிய முன்னாய்வுக் களங்கங்களைப் பற்றி அறிதலாகும். அவ்வகையில் தொல்காப்பியம் நமக்கெல்லாம் சிறந்ததொரு ஆய்வு நெறிமுறையினை எடுத்தியம்புகிறது.

## தொல்காப்பியம் கட்டமைப்பு முறை :

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது [illegible] பிரிக்கப்பட்டு மொத்தம் இருபத்தேழு இயல்[illegible] முழுமையும் எடுத்துரைக்கப் பட்டு[illegible]

### 1. எழுத்ததிகாரம்:

இவ்வதிகாரம் தனி மொழியிலும் புணர்மொழியிலும் உள்ள எழுத்துகளைப் பற்றிப் பேசுகிறது. இதில் மொத்தம் 483 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. இதில் ஒன்பது இயல்கள் அடங்கியுள்ளன. 1. நூன் மரபு 2. மொழி மரபு 3. பிறப்பியல் 4. புணரியல், 5. தொகை மரபு 6. உருபியல் 7. உயிர் மயங்கியல் 8. புள்ளி மயங்கியல் 9. குற்றியலுகரப் புணரியல் என ஒன்பது இயல்களாக அமைந்துள்ளது.



### 2. சொல்லதிகாரம்:

இவ்வதிகாரம் மொழித் தொடர் (Syntax) அமையும் முறையினை எடுத்துரைக்கின்றது. இவ்வதிகாரத்தில் மொத்தம் 463 நூற்பாக்கள், ஒன்பது இயல்கள் அடங்கியுள்ளன.

1. கிளவியாக்கம், 2. வேற்றுமையியல், 3. வேற்றுமை மயங்கியல், 4. விளி மரபு, 5. பெயரியல், 6. வினையியல், 7. இடையியல், 8. உரியியல், 9. எச்சவியல் என ஒன்பது இயல்களாக அமைந்து சொல்லின் சிறப்பினை விளக்கியுள்ளார்.

### 3.பொருளதிகாரம் :

தொல்காப்பியத்தின் மூன்றாவது அதிகாரமான பொருளதிகாரம் மனித வாழ்க்கைக்கான இலக்கணம் உணர்த்துகின்றது. அப்பொருள் சொல்லப்பட்ட யாப்பு மற்றும் உவமம் (உவமையணி) குறித்தும் விளக்குகிறது. இவ்வதிகாரத்தில் ஒன்பது இயல்களில் 664 நூற்பாக்கள் அமைந்துள்ளன. 1. அகத்திணையியல் 2. புறத்திணையியல் 3. களவியல் 4. கற்பியல் 5. பொருளியல், 6. மெய்ப்பாட்டியல் 7. உவமவியல் 8. செய்யுளியல், 9. மரபியல் என இவ்வதிகாரம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

## தொல்காப்பிய உரையாசிரியர்கள் :

தொல்காப்பியம் முழுமைக்கும் முதன்முதலில் உரை கண்டவர் இளம்பூரணர் ஆவார். இதனால் இவர் 'உரையாசிரியர்' என்ற சிறப்புப் பெயரும் பெற்றார். இவரது காலம் கி.பி.பதினொராம் நூற்றாண்டு என்பர். இளம்பூரணர்க்குப் பின்னர்த் தோன்றிய சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மட்டும் சிறந்ததோர் உரை இயற்றினார். இவரைத் தொடர்ந்து தெய்வச் சிலையார், கல்லாடர் ஆகிய இருவரும் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை இயற்றினர். பேராசிரியர், பொருளாதிகாரத்திற்கு மட்டும் விரிவாக உரை இயற்றினார். நச்சினார்க்கினியார் தொல்காப்பியம் முழுமைக்கும் விரிவான உரை கண்டார். பதினேழாம் நூற்றாண்டில் மீண்டும் தொல்காப்பிய ஆராய்ச்சி தொடங்கியது. இதனைத் தொடங்கி வைத்தவர் சிவஞான முனிவராவார்.

இளம்பூரணர் தொடங்கி வைத்த உரைப் பணியைத் தொடர்ந்து பல உரையாசிரியர்கள் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியுள்ளனர். இவற்றுள் தொல்காப்பியம் முழுமைக்கும் கா.வெள்ளைவாரணார், ஆ.சிவலிங்கனார் ஆகிய உரை வளங்கள் மிக சிறந்தனவாக போற்றப்பட்டுள்ளன.

## முடிவுரை :

தொல்காப்பியம் தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூலாக இருந்து எழுத்து, சொல், பொருள் என்னும் மூவகையான இலக்கணம் உணர்த்தினாலும், தொல்காப்பியத்தைத் தொடர்ந்து நன்னூல், நேமிநாதம் (எழுத்து, சொல்), யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம், (யாப்பு), புறப்பொருள் வெண்பாமாலை (புறம்), நம்பியகப் பொருள், மாறனகப் பொருள் (அகம்), தண்டியலங்காரம், மாறனலங்காரம் (அணி), வீர சோழியம், தொன்னூல் விளக்கம் (ஐந்திலக்கணம்) போன்ற பல இலக்கண நூல்கள் உருவாகக் காரணமாயிற்று என்பது சிறப்புக்குரியதாகும்.மனித வாழ்க்கைக்கு இலக்கணம் கூறிய ஒரே இலக்கண நூல் தொல்காப்பியப் பொருளதிகாரம் என்பது தமிழ் மொழிக்கேயுரிய சிறப்பாகும்! தமிழ் மொழியின் அருமை உணர்ந்தோர் தொல்காப்பியத்தின் சிறப்பினையும் உணர்வர்!

Scanned with OKEN Scanner

தமிழ் எழுத்தாளர் மன்றம்

TAMIL WRITERS FOUNDATION

G-05,Udyog Vihar Industrial Estate,Near Vithalwadi Railway Station,Ulhasnagar-421003,Thane Dist,Maharashtra.
Contact: 7875848340, 9820046075 Email: mahatwf@gmail.com

# மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றம்

★ வெள்ளி விழா மாநாடு ★

★ கலை இலக்கியப் பொங்கல் பெருவிழா ★

★ வெள்ளி விழா மலர் வெளியீட்டு விழா ★

★ தமிழறிஞர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா ★

★ வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா ★

## பங்கேற்புச் சான்றிதழ்

02.02.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மும்பை பாண்டுப்பில் வெள்ளிவிழா மாநாட்டு இயக்குநர் பாவரசு வதிலை பிரதாபன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் வெள்ளி விழா மாநாட்டில் , திரையிசைப் பாடல்கள்/நடனம்/கவியரங்கம்/பட்டிமன்றம் நிகழ்வில் கலந்து கொண்டு தமது பங்களிப்பை வழங்கிய திரு/திருமதி/கவிஞர் முனைவர் ச. பிரியா, (கட்டுரை) அவர்களை வாழ்த்திப் பாராட்டி இந்த பங்கேற்புச் சான்றிதழை அன்புடன் வழங்குவதில் பேருவகை கொள்கின்றோம்.

கட்டுரைத் தலைப்பு : தொல்காப்பியத் திணைகள்

நாள்: 02.02.2025

இடம்: மும்பை

பாவரசு வதிலை பிரதாபன்
வெள்ளிவிழா மாநாட்டு இயக்குநர்,
தமிழ் எழுத்தாளர் மன்றம்

புலவர் சிதம்பரநாதன்
திரைப்படப் பாடல் மற்றும் கதையாசிரியர்-
சென்னை

கவிஞர் நா. முத்து நிலவன்
மாநிலத் துணைத் தலைவர், தமிழ்நாடு
முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம்

முனைவர் மு. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் ஸ்ரீபாரதி கலை அறிவியல் மகளிர் கல்லூரி,
ஆலோசகர் - தமிழ் எழுத்தாளர் மன்றம்

முனைவர் க. முருகேசன்
பேராசிரியர், கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,
ஆலோசகர் - தமிழ் எழுத்தாளர் மன்றம்

Scanned with OKEN Scanner